மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிற விடுதிகளில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் அந்த உணவு விடுதிகளை நடத்துகின்றது. தனியார் யாரிடத்திலும் ஒப்பந்தங்கள் விடுவ தில்லை. வழங்கப்படுகிற உணவு நன்றாக இருக்க வேண்டு மென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்தைத் தெரிவிக் கிறார்கள். உணவை நன்றாகப் படைக்கிறபொழுது அதற்கான செலவையும் நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

குதிரைமசால் மாட்டுத் தீவனத்தைப் ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் திட்டம்.

*வினா எண் 47. திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டையில் தயாராகும் குதிரை மசால் தீவனம் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யத் தமிழ்நாடு அக்ரோ நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குதிரை மசால் தீவனத்திற்கு இந்தப் பெயர் வரக் காரணம் என்ன? அதனுடைய சிறப்பு அம்சம் என்ன? ஒரு ஏக்கரில் பயிரிட்டால் என்ன செலவாகும்? அதனால் என்ன இலாபம் வருகிறது? அதைச் சாப்பிடுகிற மாடுகளிடமிருந்து பால் அதிகமாகக் கிடைக்கிறதா என்ற விவரத்தை அமைச்சர் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர் களே, கால்நடைகள், கோழிகள், ஒருவேளை குதிரை மசாலை மசாலாவைப் போல் உண்பதால், இப்பெயர் வந்திருக்கக் கூடும். ஆனால் எவ்வளவு ஏக்கருக்கு, எவ்வளவு இலாபம் என்பதைப் பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. வேளாண்மைத் தொழி லாக அது உற்பத்தி செய்யப்படுகிறது. மகாராஷ்டிரம், குஜராத், கர்நாடகம் போன்ற மாநிலங்களிலே இப்பொழுது நாம் விற்பனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பெரிதாகப் பேசப்பட்டுவரும் கூபா புல்லுக்கும் இதற்கும் என்ன ஒற்றுமை, வேற்றுமை இருக்கிறது? ஏதாவது சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அது வேறு, இது வேறு.

திரு. எம். சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான் போன்ற நாடுகளில் அதற்கான மார்க்கெட் நிரம்ப இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, கோவை மாவட்டத்தில் அந்தப் பகுதியில், குறிப்பாக, வறட்சிப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் பயன்பெறுகிற வகையில், அதனை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை, அரசு மீண்டும் பரிசீலித்து, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய சாத்தியக் கூறுகளைப் பரிசீலிக்குமாறு வேளாண் தொழிற் கழகத்தை அரசு கேட்டுக் கொள்ளும்.

[முற்பகல் 9.30]

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இன்றைக்கு வேறு பயிர்களை பயிர் செய்யும்போது அதிக பூச்சிக் கொல்லி மருந்துகளும், உரமும் தேவைப்படுகின்றன. ஆனால் அதன் வருமானம் குறைவாக இருக்கின்றது. இந்தக் குதிரை மசால் தீவனம் பயிர் செய்வதற்கு அதிகமான பூச்சி மருந்துகளோஅல்லது அதிக அளவு உரமோ தேவையில்லாமல் வளருகின்ற நிலை இருக்கின்றது. எனவே இதை அதிகமாகப் பயிர் செய்ய ஊக்குவித்து அதிகமான விலை பெறுகிற அளவுக்கு இதை எங்கெங்கு ஏற்றுமதி செய்ய முடியுமோ அங்கெல்லாம் ஏற்றுமதி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இவைகள் அனைத்தையும் அரசு பரிசீலிக்கும்.

தேவகோட்டையிலுள்ள விவசாயப் பண்ணை.

*வினா எண் 48.—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டையில் உள்ள விவசாயப் பண்ணை நஷ்டத்தில் நடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) வேலி அமைத்தல் மற்றும் நீர்ப்பாசன வசதிகளை பெருக்குவதன் மூலமும் விதை உற்பத்தியை பெருக்குவதன் மூலமும் தேவகோட்டையிலுள்ள அரசு பண்ணையை நல்ல முறையில் இழப்பின்றி நடத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS